# கிரிபாவ பிரதேச சபை
## குருணாகல் மாவட்டம்

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மே 09 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஆகஸ்ட் 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 அபிப்பிராயம்**

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, கிரிபாவ பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிரிபாவ பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் இனங்காணப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்படாதிருந்ததுடன் 2011 திசெம்பர் தொடக்கம் 2012 யூன் வரையான காலத்திற்காக 2012 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட ரூபா

287,605 தொகையான முத்திரைக்கட்டண வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) கிடைக்க வேண்டிய ரூபா 36,509,966 தொகையான வேலைக் கடன்பட்டோர் பெறுமதி மூலதன உதவிக் கணக்கில் செலவு வைக்கப்பட்டு கடன்பட்டோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருக்கும் போது திரும்பவும் ஒரு முறை கடன்பட்டோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டு ஏனைய உதவிக் கணக்கில் செலவு வைக்கப்பட்டமையினால் ஆண்டின் மிகை மற்றும் நிலுவையாக இருந்த ஏனைய வருமானம் என்பன ரூபா 36,509,966 தொகை அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2010 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்காக ரூபா 649,855 தொகை மற்றும் 2011 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்காக ரூபா 18,628,800 தொகையும் ஆக நடப்பாண்டில் செய்யப்பட்ட ரூபா 19,278,655 தொகை மூலதன உதவியாக கணக்கு வைக்கப்பட்டதன் அடிப்படையில் மிகை அந்த அளவினால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 41,373,839 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 38,083,976 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 4,183,403 ஆக இருந்தது.

**2.2 நிதிக்கட்டுப்பாடுகள்**

பின்வரும் நிதிக்கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பாதீடு செய்யப்பட்ட தேறிய நிதியேற்பாடு ரூபா 18,926,000 தொகையும், உள்ளபடியான செலவினம் ரூபா 67,899,000 ஆனமையால் ரூபா 48,973,000 மிகை காணப்பட்டதுடன் அது தொடர்பாக குறைநிரப்பு ஏற்பாட்டின் மூலம் மேலதிக நிதியேற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டுகளின் போது கடன்கொடுத்தோர் மிகை ஏற்பாடுகள் செய்ததன் அடிப்படையில் கடன்கொடுத்தோர் ரூபா 3,874,125 தொகை மீளாய்வாண்டின் போது மிகையாகவும் பற்றாக்குறையாகவும் கணக்குகளுக்கெதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 130 | 190 | - |
| (ii) | வாடகை | 1,725 | 2,205 | 681 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 135 | 169 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 13,944 | 13,843 | 2,332 |

### 2.3.2 வாடகை

(அ) சபைக்குரிய ஆகக் குறைந்த கேள்வி ரூபா 160,050 தொகையான இரண்டு சொத்துக்கள் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது வாடகைக்கு வழங்க முடியாதிருந்ததுடன் 1990 தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையான காலத்தில் வாடகைக்கு வழங்கப்பட்ட 13 சொத்துக்களுக்காக ரூபா 234,016 தொகையும், 2011 ஆம் ஆண்டில் வாடகைக்கு வழங்கப்பட்ட 3 சொத்துக்களுக்காக ரூபா 42,824 தொகையும், 2012 ஆம் ஆண்டில் வாடகைக்கு வழங்கப்பட்ட 03 சொத்துக்களுக்காக ரூபா 182,232 தொகையும் மற்றும் அதற்குரிய தண்டப்பணம் என்பன மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த கேள்வியின் அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கான வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் 4 தவணைக்குச் சமமான பணம் ''பாதுகாப்பு வைப்பாக'' வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் வாடகைக்கு விடப்பட்ட 3 சொத்துக்களில் பெறப்பட வேண்டிய பிணைப்பணம் ரூபா 126,630 தொகை குறைவாகப் பெறப்பட்டிருந்தது. கேள்வியின் அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதன் கீழ் வாடகை உடன்படிக்கையின் 03 மற்றும் 04 ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு மாதத்திற்குரிய தவணை வாடகைப் பணம் அடுத்துவரும் மாதத்தின் 10 ஆந் திகதிக்கு முன் செலுத்த வேண்டியிருந்ததுடன் அவ்வாறு செலுத்துவதற்கு முடியாது போகுமாயின் 10 சதவீத தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும் தாமதக் காலத்திற்காக ரூபா 69,379 தொகையான தண்டப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 தொலைபேசிப் பரிவர்த்தனை கோபுரங்களுக்கான செயன்முறைக் கட்டணம்

சபை அதிரப் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தொலைபேசிப் பரிவர்த்தனைக் கோபுரங்கள் தொடர்பான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு கட்டணத்தை அறவிடுவதற்கு சபை கவனம் செலுத்தாதிருந்ததுடன் மீளாய்வாண்டில் ஒரு கோபுரத்தின் அபிவிருத்தி உதவியாக ரூபா 200,000 தொகை பெறப்பட்டு வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

### 2.3.4 வாகனம் நிறுத்தி வைத்தல் கட்டணம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு உரிய உப விதி காணப்பட்ட போதிலும் முச்சக்கர வண்டி நிறுத்துவதற்குரிய வருடாந்த அல்லது

காலரீதியான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற முச்சக்கர வண்டிகளைப் பதிவு செய்வதற்கோ அல்லது நிறுத்தும் இடங்களை முறைமைப்படுத்தலோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.3.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை

**2.4 செயற்பாடற்ற பௌதீக வளங்கள்**

ரூபா 151,000 பெறுமதியான 800 கலன் கொள்ளவையுடைய தண்ணீர் பவுசர் ஒரு வருட காலமாக செயற்பாடற்றுக் காணப்படுகின்றது.

**2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 4,177,750 தொகையான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் விதி இலக்கம் 218 இன் ஏற்பர்டுகளின் பிரகாம் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.6 சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்**

சபையினால் சொத்துக்களை வாடகைக்கு வழங்குதல் தொடர்பாக 8 சந்தர்ப்பங்களில் ரூபா 304,827 தொகையான நிலுவை வாடகை தொடர்பாக வழக்குத் தொடரப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 12,488 தொகையான நிலுவைப் பணம் அறவிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. ரூபா 209,223 தொகையான நிலுவை காணப்பட்ட 03 சொத்துக்கள் தொடர்பாக மாதாந்தம் ரூபா 5,000 படி அறவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 83,116 பெறுமதியான 03 சொத்துக்கள் தொடர்பான செயல்முன்னேற்ற வழக்குப் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்படாதிருந்தமையினால் இனங்காணப்பட முடியாதிருந்தது.

## 2.7 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

சேதனப் பசளை உற்பத்திக்காக கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தை ஆரம்பிப்பதற்காக ரூபா 50,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அதன் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்